வில்லை என்ற புகார்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றனவா? அப்படிப்பட்ட புகார்களை நிவர்த்தி செய்ய அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து வேலைக்கு அனுப்பப்படுகின்றபோது கண்டிப்பாக சீனியாரிட்டி அடிப்படையில் அனுப்ப வேண்டுமென்று அரசு பிரத்தியேகமான ஆணை பிறப்பித்திருக்கின்றது. குறிப்பாக உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், 1982-ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு வேலை கிடைக்கின்ற நிலைமையும், 1972-ஆம் ஆண்டிலே பதிவு செய்து இன்னும் வேலையில்லாமல் இருக்கும் நிலைமையும் மாறாக அனுப்பிவிடுவதையும் குறித்து சில சமயங் களில் சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக என்னுடைய கவனத் திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அத்தகைய தவறுகளைத் தவிர்க்க கண்டிப்பாக அரசு நடவடிக்கை எடுக்கும். மேலும், இத்தகைய குறைபாடுகளைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக அண்மையிலே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், இந்த ஆண் டில் பட்ஜெட்டில் அறிவித்த ஒரு திட்டத்தின் அடிப்படையில், 1984-85-ஆம் ஆண்டைப் பொறுத்த அளவில், இத்தகைய நிலைமையைப் போக்க வேண்டுமென்ற உணர்வோடு, 6 இலட்சம் ரூபாய் செலவில் பிரத்தியேகமாக கம்பியூட்டர் முறையைக் கையாண்டு, முதலில் சென்னை நகரில் இருக்கக்கூடிய 5 வேலை வாய்ப்பு அலுவலகங்களில் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது. இந்த நடவடிக்கையை பரீட் சார்த்தமாக, சென்னை நகரில் மட்டும் செய்துவிட்டு, பிறகு மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்க அரசு இருக்கிறது. இந்த வகையில் கம்பியூட்டர் முறை கொண்டுவரப்படுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன அந்தக் குறைபாடுகள் வருங்காலத்தில் எழாது என்று நான் கருதுகிறேன்,

204. (* *Q.*—No. 20051).—Thiru P. VENKATASUBRAMANIAM: Will the Hon. the Minister for Adi Dravidar Welfare be peased to state whether the Government have taken any statistics in regard to the educated unemployed in the State?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: ஆம்.